*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 16/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE-2***

*Name / Father's Name:* ***திரு.தங்கராசு த/பெ. கந்தகவுண்டர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.11.2025.**

துவக்க நேரம் 01.55 A.N

**முதல் விசாரணை**

1) நான், வனவராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். நான், கடந்த 2017-2018 ம் வருடம் கருமந்துறை வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 07.02.2018 அன்று வனச்சரக அலுவலகருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், அன்று காலை 10.00 மணியளவில் பெரியகல்வராயன் பிரிவு, கரியகோயில் பீட், சூலாங்குறிச்சி பிளாக்-8 ல் உள்ள மேல்பூண்டி பகுதியில் வனச்சரக அலுவலர் திரு.ஞானராஜ், வனவராகிய நான், வனக்காப்பாளர் திரு.சண்முகம் ஆகிய மூன்றுபேரும் ரோந்து சென்றோம்.

2) அப்பொழுது வெள்ளையன் த.பெ அண்ணாமலை என்பவர், 07.02.2018 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் மேற்கண்ட சூலாங்குறிச்சி வனப்பகுதி, காப்புக்காட்டில் உள்ள செடி, கொடி, முட்புதர்களை வெட்டிக்கிடந்ததையும், மேலும் வெட்டியும் எடுத்து தீ வைத்து எறித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது நாங்கள் மூன்று பேரும், அவரை சுற்றி வளைத்து விசாரித்தபொழுது, வனப்பகுதி காப்புக்காட்டிற்குள் தீ வைத்தது தவறு என்று ஒப்புக்கொண்டும், மேலும் தனது பெயர் மற்றும் விலாசத்தை கூறி

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி வனக்காப்பாளர் திரு.சண்முகம் என்பவர், எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜர் ஸ்டேட்மென்ட் தயார் செய்ததில், நான் கையெழுத்து செய்தேன். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம், மகஜர் ஸ்டேட்மென்டில் உள்ள கையெழுத்துகள் என்னுடையதுதான்.

3) மேலும் வனக்காப்பாளர் திரு.சண்முகம் என்பவர், எதிரியிடமிருந்து கொடுவாளும், தீப்பெட்டி, மண்வெட்டி ஆகியவற்றை கைப்பற்றினார். மேற்படி கைப்பற்றிய தடயசொத்துக்களை வைத்து H நமூனா தயார் செய்தார். பின்பு சம்பவயிடத்தில் படம் வரைந்து, ஆவணங்கள் தயார்செய்யப்பட்டன. பின்னிட்டு எதிரி மற்றும் வழக்குசொத்துடன் நிலையம் வந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். பின்பு கைப்பற்றிய பிடிபொருட்கள் வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்தேன். மேற்படி எதிரியின் செயல் தண்டனைக்குரிய குற்ற செயல் என்பதால் அவருக்கு தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த எதிரி, அந்த இடத்தில் சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு செடி, கொடிகளை வெட்டியதற்கு வழக்கு போடப்பட்டு, அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு ரூ.15,000/– அபராதமும் செலுத்தியுள்ளார்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) மேற்படி நான் கூறிய காப்புக்காட்டிற்குரிய சர்வே எண்ணை இவ்வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. மேற்படி காப்புகாட்டிற்கென்று தனியாக சர்வே எண் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும், அ.த.சா.ஆ.7 ல் உள்ள எறிக்கப்பட்ட காடு, காப்புக்காட்டில்தான் எறிக்கப்பட்டதா என்பதற்கான எந்த அடையாளமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சின்னகல்வராயன் பகுதியை சேர்ந்த வனவர்தான் என்று சொன்னால் சரிதான்.

2) நான் சின்னகல்வராயன் பகுதியை சேர்ந்த வனவர் என்ற நிலையில், சூலாங்குறிச்சி பிளாக் 8 வனப்பகுதிக்கு நான் பொறுப்பு அலுவலர் என்பதற்கான ஆவணங்களை முன்னிலைப்படுத்தாத நிலையில், இந்த வழக்கு ஆவணங்களில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ய எனக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பொருட்களாக இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள கொடுவாள், தீப்பெட்டி, மண்வெட்டி ஆகியவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை.

3) இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம், மகஜர் ஸ்டேட்மென்டில் தனிநபர்களை சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை, வனக்குற்றத்தில், காப்புக்காட்டில் யார் நுழைந்தாலும் அவர்கள்மீது வழக்கு பதியப்படும் என்பதால் தனிநபர் யாரையும் காப்புக்காட்டில் சாட்சியாக அழைக்கமாட்டோம்.

4) நாங்கள் தயார் அனைத்து ஆவணங்களையும், எங்கள் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரியிடமிருந்து, நாங்கள் எந்த பொருளையும் கைப்பற்றுவில்லை என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லும் காப்புக்காடு, காப்புக்காடுதான் என்பதற்கான ஆவணத்தையும் ஒப்படைக்கவில்லை என்றும், GPS மூலம் எடுக்கப்பட்ட வரைபடத்தை சம்மந்தமில்லாத வரைபடத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

5) எதிரியின் பெயரில் உள்ள பட்டா நிலத்தில் உள்ள செடி, கொடிகளை எறித்ததற்கு, காப்புக்காட்டில் உள்ள செடி, கொடிகளை எறித்ததாக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் காப்புக்காடே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. புள்ளி விவர

கணக்கிற்காக, எதிரிக்கெதிராக வழக்கு பதிவு செய்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 02.15 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.13 19:31:17 +0530

Judicial Magistrate No.2, Attur.